நிலவுடைமைச் சமூகத்தில்

சத்தமின்றி ரத்தமின்றி ஜமீன்தாரி முறையை ஒழித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

சட்டப்பேரவையில் ஆயிரம் விளக்கு தொகுதி உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் புகழாரம்!

சென்னை, ஜீன் 27- சட்டப்பேரவையில் ஆயிரம் விளக்குத் தொகுதி உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் பேசுகையில் 'நில வுடைமைச் சமூகத்தில் சத்தமின்றி - ரத்தமின்றி ஜமீன்தாரி முறையை ஒழித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்றும், அதிகார மையங்களில் சாதி ஒழிப்பை கொண்டுவந்தவர் நம் முதல்வர் என்றும் குறிப்பிட்டார்.

ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், கதர் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் ஆயிரம் விளக்குத் தொகுதி உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நெருக்கமான துறைகள் இரண்டு துறை. ஒரு துறை உடல்ரீதியான குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு காணும் துறை அது மாற்றுத்திறனாளிகள் துறை; இன்னொரு துறை சமூகக் கோட்பாடால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாங்கும் துறை அது ஆதி திராவிடர் நலத் துறை. அந்த ஆதி திராவிடர் நலத் துறையில் என் விவாதத்தைத் தொடங்குகிறேன்.

நான் பிறந்த மதத்தில் சாக மாட்டேன் என்று அண்ணல் அம்பேத்கர் அக்டோபர் 14 ஆம் தேதி 1956 ஆம் ஆண்டு தீக்ஷா பூமியில் 4 இலட்சம் பட்டியல் இன மக்களோடு புத்த நெறியைத் தழுவினார். அவ்வாறு அவர் தழுவும் போது, மதமாற்றம் அடைந்தால் சாதிச் சான்றிதழ், SC சான்றிதழ் போய்விடும் என்று தெரிந்தே 4 இலட்சம் பட்டியல் இனத்தவர் அண்ணல் அம்பேத்கருடன் சேர்ந்து 22 உறுதி மொழிகளை எடுத்தார்கள். 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதன்முறை யாக முத்தமிழறிஞர் கலைஞர்தான் SC மதத்திற்கு மாறினாலும், பௌத்த மதத்தைத் தழுவினாலும், அவர்களுக்கு SC சான்றிதழ் வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

சாதி என்பது ஒரு மனநோய்

அதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வி.பி. சிங் அவர்கள், நாடு முழுவதும் SC சான்றிதழ்களை மக்களுக்கு உரிமையாக வழங்கினார். இன்று வி.பி. சிங் அவர்களுக்குப் பிறந்தநாள். சமூகநீதிக் காவலருக்கு சிலை வைத்த நம் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகிறேன். சாதி என்பது ஒரு மன நோய். "Caste is a disease of the mind" என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார். சாதி என்பது நில உடமைகளிலும், பல்கலைக் கழக வளாகங்களிலும், கல்லூரி வளாகத்திலும் ஏன் அதிகார மையத்திலும் நிலவி வருகிறது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைப் புனிதம் என்றும், இன்னொரு குறிப்பிட்ட சமூகத்தினரைத் தீட்டு என்றும், வகைப்படுத்திப் பிரித்தால் அதன் நிலவரம் கொடூரமான நிலவரம்.

தான் மேலிருக்கும் சாதி படிக்கட்டுகளில் இருப்பவர்களை மரியாதையாக பார்ப்பதும், கீழ் உள்ளவர்களை அவமரியாதையாகவும் பார்க்கும் ஒரு நிலை இழிவு நிலை. இந்த இழிவு நிலைக்கு எதிராக களம் அமைத்த இயக்கங்கள்தான் இந்த நாட்டின் முற்போக்கு இயக்கங்கள். புத்தரில் தொடங்கி, கபீரில் தொடங்கி, மராத்திய மண்ணில் மஹாத்மா பூலேவும், அண்ணல் அம்பேத்கரும், கர்நாடகாவில் பசவண்ணா, கேரளாவில் நாராயண குரு போன்றவர்கள் களம் அமைத்தார்கள். நம் தமிழ்நாட்டில் சித்தர் வழி வழிபாடு, அய்யா வழி வழிபாடு, இராமலிங்க அடிகளார், அயோத்திதாச பண்டிதர் போன்றவர்கள் சமூக தளத்தில் பண்பாட்டு புரட்சி நடத்தினார்கள்.

ஆனால், அரசியலில் சமூக தளத்தில் இந்தச் சமூகத்தை சமுத்துவத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தது திராவிட இயக்கம், நீதிக் கட்சி. ஆதி திராவிடர் என்ற சொற்றொடரை முதன்முதலில் அரசாங்க Gazetteல் ஏற்றியது நீதிக் கட்சி. பொது பேருந்துகளிலும், பொது கிணற்றிலும் தீண்டாமையை கடைப்பிடிப்பதை சட்டங்கள் கொண்டு அதை நிறுத்திய வர்கள் நீதிக் கட்சியாளர்கள்.

தந்தைப் பெரியார். ஜாதி பெயரை அகற்றியவர். சுயமரியாதை என்ற வார்த்தையை வாழ்வியலாக இந்த மக்களுக்குக் கொடுத்தவர். ஜாதி சங்கங்களுக்கு சென்ற தந்தைப் பெரியார் அங்கே ஜாதி பெருமையைப் பற்றி பேசவில்லை. ஜாதி இழிவுகளை பேசி ஜாதி ஒழிப்பில் ஈடுபட்டவர் தந்தைப் பெரியார்.

பேரறிஞர் அண்ணா. நம் தி.மு.க.வின் தலைமைச்செயலகமான அறிவகம் தொடக்க விழாவை பட்டியல் இன சமூகத்தைச் சார்ந்த கழக உடன்பிறப்பு, கன்னியாகுமரி திரு. வி.என். ஜான் அவர்களை வைத்து திறந்தார். அதுதான் இந்த நாட்டுக்கு அவர் சொல்லும் செய்தி. அந்த செய்திதான் இன்று தங்கை அனிதாவிற்காக மனுதர்ம போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் எங்கள் இளைஞர் அணி செயலாளரின் போராட்டமும் அந்தப் போர் வையில்தான் நாங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசாணைகள். நிலவுடைமைச் சமூகத்தில் சத்தமின்றி, இரத்தமின்றி ஜமின்தாரி முறையை ஒழித்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அது நிலச் சீர்த்திருத்த சட்டமாக இருந்தாலும், ஒரு விவாதம் நடக்கிறது, இதே சட்டமன்றத்தில், 2006 ஆம் ஆண்டு பொதுவுடைமைக் கட்சி வரதராஜன் ஒரு கேள்வி எழுப்புகின்றார், அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர்; நாங்கள் ஆட்சிக்கு வந்த பிற்பாடு வங்காளத்தைவிட நிலச் சீர்த்திருத்தத்தை நாங்கள் கொண்டு போய் சேர்த்திருக்கிறோம். 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 1 இலட்சத்து 34 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை கொடுத்திருக்கிறோம். அதில் 64 ஆயிரம் பேர் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று இங்கே பதிவு செய்கின்றார்.

இந்தியா முழுமை க்கும் பட்டியல் இன சமுதாய மக்களுக்கு இடஒதுக்கீடு 15 சதவிகிதம். ஆனால், முத்தமிழறிஞர் அவர்களின் இடஒதுக்கீடு கொள்கையால் தமிழ் நாட்டில் 18 சதவிகிதம். ஒரு சதவிகிதம் பழங்குடியினருக்கு. இடஒதுக்கீடு கொள்கையை கல்லூரி வளாகத்தில், பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தினார்.

பெரியார் சமத்துவபுரம். ஊரெங்கும், ஊரும், காலனியும், ஊரும், சேரியும் பிரிந்திருந்த சூழலை அகற்றி, பெரியார் சமத்துவபுரத்தில் டோக்கன் இட்டு, ஒன்றாம் நம்பர் என்றால் பட்டியல் இன மக்கள், இரண்டாம் நம்பர் என்றால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மூன்றாம் நம்பர் என்றால் பிற்படுத்தப்பட்டோர் என்று வரிசைப்படுத்தி, பெரியார் சமுத்துவபுரத்தில் இன்றுவரை ஏதாவது ஒரு சாதிபூசல் சண்டை நடந்துள்ளதா என்ற குறிப்பை நான் இங்கே வைக்கின்றேன். ஏனென்றால், அங்கே சுமுகமான வாழ்க்கை நெறியை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தச் சித்தாந்தங்களின் ஒருங்கிணைப்பாகதான் நம் தமிழ்நாட்டின் முதல்வர் வலம் வருகின்றார்.

அம்பேத்கார் பிறந்தநாள் சமத்துவ நாள்!

நம் தமிழ்நாட்டின் முதல்வர் அதிகார மையங்களில் ஜாதி ஒழிப்பில் ஈடுபடுகின்றார். இன்று நமது சட்டமன்றம் அதிகார மையத்தின் உச்சம். இந்தச் சட்டமன்றத்தில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாள் என்று கூறி, அனைவரையும் ஜாதி ஒழிப்பு நடவடிக்கையில் உறுதிமொழி ஏற்க வைத்தவர் நம் தமிழ்நாட்டின் முதல்வர் ஆவார்.

அதுமட்டுமா, துணைச் சட்டம். அதாவது ஒவ்வொரு துறையிலும் துணைச் சட்டம் என்பது பல்வேறு துறைகளுக்குப் போகும். சில துறைகள் gap fundingகாக ஆதி திராவிடர் நலத் துறையின் fundஐ எடுத்துக்கொண்டு பயன்படுத்துவார்கள். அப்படி பயன்படுத்தக்கூடாது என்று சொல்லி, துணைச் சட்டத்திற்குப் பாதுகாப்பு அளித்து, ஆதி திராவிடர் நலன் என்பது அந்தத் துறைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்ற சட்டத்தை நிறை வேற்றியவர் நம் தமிழ்நாட்டின் முதல்வர்.

திறன்மிக்க நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களை வரிசைப்படுத்தினார். ஓர் ஆய்வு என்ன சொல்கிறது என்றால், தமிழ் நாடு அரசுப் பள்ளிகளில் உள்ள எண்ணிக்கையைப் பார்த்தால், 50 இலிருந்து 60 சதவிகிதம் பட்டியல் இன மக்கள் படிக்கின்றனர், 30 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் படிக்கின்றனர், 10 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோர், 1 சதவிகிதம்தான் மேல் ஜாதியினர் படிக்கின்றனர். அப்படியென்றால், நம் பள்ளிக் கல்வியில் நடக்கும் அனைத்து சீர்த்திருத்தங்களும், இல்லம் தேடி கல்வி, தகைசால் பள்ளிகள், Smart classrooms, தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்ற அனைத்து திட்டங்களும் பட்டியல் இன மக்களிடம் கொண்டு சேர்க்கும் திட்டமாக அமைவதால் தான் இன்று ஆதி திராவிடர் பள்ளியில் பத்தாம் வகுப்பனி pass percentage 81 ஆக உள்ளது.

12 ஆம் வகுப்பு மாணவர்களின் pass percentage 85%. அப்போது நாம் செய்த எல்லா முயற்சிகளும் மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பது கல்வி நிலையங்கள். உங்களுக்குத் தெரியும் எவ்வளவு நாளைக்குத்தான் நாம் தொழிலாளியாக இருப்பது என்று, விவசாய கூலியாக இருந்து என்று பார்த்து, ஆதி திராவிடர் மக்களையும் தொழில் முனைவராக்கி அழகு பார்த்தவர் தமிழ் நாட்டு முதல்வர், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம். கிட்டத்தட்ட 1,300 பேருக்கு 130 கோடி ரூபாய் மானியம் கொடுத்து தொழில் கொடுப்பவராக மாறியுள்ளார்கள். SC/ST Startup. அதாவது ஒரு தொழில் முனைவோர் திட்டத்தை பட்டியலின மக்களுக்காக உருவாக்கி கூலி வேலைகள், தினசரி வேலைகளை மாற்றியமைத்து, சென்ற வருடம் மட்டுமே 71, இந்த வருடம் 14 இணைத்து பார்த்தால் கிட்டத்தட்ட 100 startup நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பட்டியலின மக்களுக்கு உருவாக்கியுள்ளனர். இந்தச் சூழல்தான் சமத்துவத்தை நோக்கிய பயணம். அப்போது சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் நான்கே நான்கு கோரிக்கைகளை நான் உங்கள் முன் வைக்கிறேன்.

முனைப்புடன் செயல்படும் அதிகாரிகள்

ஒவ்வொரு District Adi Dravidar Welfare Officer என்பது punishment posting ஆகவும், அதாவது இறுதியில் retirement ஆகின்ற ஆட்களை அங்கு பணியமர்த்தி வைத்து இருக்கிறார்கள். இந்த மாதிரி அரசின் நூதன திட்டங்களை மக்களுக்கு கொண்டுபோய் சேர்க்கவேண்டுமானால் முனைப்புடன் செயல்படும் அதிகாரிகளை நாம் நியமிக்க வேண்டும். அப்போதுதான் திராவிட மாடல் ஆட்சியின் கனவு களத்தில் நினைவாகும். அப்போது புதியதாக நியமிக்கப்பட்ட Group I, Group II தேர்வில் உள்ள அதிகாரிகளை Adi Dravidar Welfare Officer ஆக சுழற்சி முறையில் ஆண்டுக்கு ஆண்டு செயல்படுத்தவேண்டும். அப்போதுதான் நம் திட்டங்களை களத்தில் கொண்டுபோய் சேர்க்க முடியும், அது கோரிக்கை 1. கோரிக்கை 2, அதாவது விடுதிகளில் உணவு என்பது ரொம்ப ரொம்ப அவசியம் என்று நாம் பார்க்கிறோம்.

காலை உணவுத்திட்டம் அளிக்க மகளிர் சுய உதவிக்குழுக்கள்

காலை உணவுத் திட்டத்தை Scheme அமைச்சர், விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களே வந்து quality management செய்கிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று உணவை சாப்பிட்டு பார்க்கிறார்கள். ஏனென்றால் மகளிர் சுயஉதவிக் குழுக்களை உணவுக் கொடுக்கும் முயற்சியாக சேர்த்து, அங்கே ஒரு சூழலை ஏற்படுத்தி யிருக்கிறோம். ஒரு successful protein energy, malnutritionஐ ஒழிக்கும் ஒரு eco system. நீங்கள் விடுதிகளில் பட்டியலின மாணவர்கள் ஊட்டச்சத்து குறைபாடு களுடன்தான் கல்லூரிக்கு வந்து சேருகிறார்கள். அப்போது அந்த உணவு விடுதிகளில் மாணவர்களுக்கு தரமான உணவை அளிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களை இணைத்து செயல்பட வழி செய்யவேண்டுமென்று கோரிக்கை உங்கள் முன் வைக்கிறேன்.

நம் தமிழ்நாடு ஒரு பரிணாம வளர்ச்சியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது ஒவ்வொரு ஆதி திராவிடர் நலத் துறையில் இருக்கும் எல்லா நிதிகளும் வெவ்வேறு துறைகளுக்கு சென்று சேருகிறது. ஆதி திராவிடர் நலத் துறையே அனைத்து நிதி பகிர்வையும் கண்காணித்து, intersectoral coordination ஆக ஒரு committeeஐ அமைக்கவேண்டும்.

நம் ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்த ஊர் தலைவர்கள் பல்வேறு இன்னலுக்குள்ளாகிறார்கள். அந்த அதிகார வர்க்கத்தோடு அவர்களால் போட்டி போட முடியவில்லை. அவர்களின் குறையை தீர்ப்பதற்காக ஆதி திராவிடர் நலத் துறையில் ஒரு நல்ல அருமையான Grievance Cellஐ உருவாக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

இந்த அடிப்படையில் தான் நம் தமிழ்நாட்டினுடைய திராவிட மாடல் ஆட்சி, அடுத்த பரிணாமத்திற்கு கொண்டுபோய் சேர்ப்பதற்காக ஒரேவொரு குறிப்போடு என் பேச்சை நிறைவு செய்கிறேன். Australiaவில் 2008 ஆம் ஆண்டு Kevin Rudd என்ற ஒரு பிரதமர், வெள்ளையின மக்கள் Australiaவில் Aboriginal மக்களுக்கு, வெள்ளை யின மக்கள் செய்த அனைத்து இனப்படுகொலையையும், துரோகங்களையும் அதை எதிர்த்து, அவர் என்ன செய்கிறார் என்றால், அவர்களுடைய நாடாளுமன்றத்தில் பொது மன்னிப்பு கேட்கிறார். இங்கே காலகாலமாக 2,500 வருடமாக தீண்டத்தகாதவர்கள் என்று அவர்கள்மீது நாம் ஏற்படுத்திவிட்ட ஜாதிய வன்கொடுமைகளுக்கு எந்த மன்னிப்பு கேட்டாலும் ஈடாகாது. மக்களும் நம்மிடம் மன்னிப்பு கேட்கவில்லை. பொது மக்களும் மன்னிப்பு கேட்கவில்லை. ஒரு சுமூகமான வாழ் நிலையை எதிர்பார்க்கிறார்கள். அந்த வாழ் நிலையை உறுதிப்படுத்த, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி மறுப்பு திருமணங்களுக்கு இன்று காலையில் நம் தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள் அருமையான விளக்கத்தை கொடுத்தார்கள். ஆனால் வன்கொடுமை, ஜாதியின் பெயரால் கொடுமைகள் உச்சத்தில் போய் கொண்டிருக்கிறது அப்போது என்னாகிறது என்றால் withdrawal effect. எப்படி ஒருவர் alcohol சாப்பிட்டு பழகிவிட்டாரோ, எப்படி ஒருவர் cigarette சாப்பிட்டு பழகிவிட்டாரோ, இந்த ஜாதிய சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி, செலுத்தி பழகியவர்களுக்கு ஒரு சமூக நிலையில் ஏறும் போது, அங்கே இருக்கும் குடும்பத்தை பார்த்தோ, மாணவர்களை பார்த்தோ, இல்லை வளர்ந்தவர்களைப் பார்த்தோ அவர்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லையே என்ற கோபம் காழ்ப்புணர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். இந்த காழ்ப்புணர்ச்சி உச்சக்கட்டம்தான் வேங்கை வயல். அந்த காழ்ப்புணர்ச்சியின் உச்சக்கட்டம்தான் பொதுவுடைமை அலுவலகம் தாக்குதல், அந்த காழ்ப்புணர்ச்சியின் உச்சக்கட்டம்தான் நாங்குநேரி சம்பவங்கள். அந்த காழ்ப்புணர்ச்சியை தடுப்பதற்கு நாம் தன்னிச்சையாக உளவியல் ரீதியாக பல்வேறு நிபுணர்களை கலந்தாய்வு செய்து வன்கொடுமை எதிர்ப்பாக ஒரு holistic ஆன ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கை வைத்து நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு உறுப்பினர் டாக்டர் எழிலன் பேசினார்.

அமைச்சர் சி.வீ.மெய்யநாதன் பதிலுரை... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

மீது மாமன்ற உறுப்பினர்கள் 106 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். எனவே மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்ப பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு விடைபெறுகிறேன்.

அறிவிப்புகள்!

1) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இத்திட்டம், பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை வாழ்விடப் பாதுகாப்பு, அந்நிய தாவர ஆக்கிரமிப்பு அகற்றம், கடற்கரைகளைத் தூய்மைப்படுத்து தல், வன உயிரின கணக்கெடுப்பு, நெகிழிக் கழிவு அகற்றம், கடல் ஆமைகள் பாதுகாப்பு மற்றும் குடிமக்கள் அறிவியல் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் தன்னார்வத்துடன் ஈடுபடுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்கென தனி வலைதளமொன்று உருவாக்கப்பட்டு, தன்னார்வலர்கள் அதில் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுவர். மேற்கூறிய செயல்பாடுகள் அவ்வலைதளத்தில் பட்டியலிடப்பட்டு, தன்னார்வலர்கள் இப்பணிகளை மேற்கொள்ள, அவர்கள் விருப்ப ப்படும் நேரத்தை குறிப்பிடு மாறு கேட்டுக் கொள்ளப்படுவர். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் தன்னார்வலர்களுக்கு போக்குவரத்து மற்றும் சிற்றுண்டி ஆகியவை வழங்கப்படும். முதற் கட்டமாக, இத்திட்டம் சோதனை அடிப்படையில் தொடங்கிச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதியிலிருந்து ரூ.2 கோடி பயன்படுத்தப்படும்.

2) தமிழ்நாடு நாள்தோறும் நலவாழ்வுத் திட்டமானது காலநிலை மாற்றத்தை அடிப்படையாக கொண்டு, மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய வற்றுக்கு இடையே உள்ள ஆரோக்கியமான இணைப்பை புரிந்துகொண்டு, ஒருங்கிணைந்த செயல்பாடுகள்மூலம் இம்மூன்று தொகுதிகளிலும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் நோய் கண்காணிப்பு மற்றும் காலநிலை மாற்றத்திற்கேற்ற விவசாய முறைகள் மற்றும் சூழல் அமைப்பு பாதுகாப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தப்படும். மேலும், துறை வாரியான காலநிலை மாற்றத்திற்கேற்ற உத்திகள் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் பாதிப்புகள் போன்றவை கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதியிலிருந்து ரூ.3 கோடி பயன்படுத்தப்படும்.

3) தமிழ்நாடு புதுமைத் தொழில்முனைவோர் திட்டம்

இத்திட்டமானது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை தணிக்க உதவக்கூடிய நிலைத்தகு வளர்ச்சி இலக்குகளோடு ஒருங்கமைந்த புதுமையான தீர்வுகளை அளிக்கும் திட்டங்களை உருவாக்கும் மாணவர்கள், தனிநபர்கள், குழுக்கள் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை கண்டறியும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 10 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் தொழில் மாதிரிகளை உருவாக்குவர். அம்மாதிரிகளை பரிசீலித்து, சிறந்த 5 மாதிரிகளை அளிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 குழுக்களுக்கு தொழில் நிறுவனங்கள் துவக்குவதற்கான ஆதார நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, பசுமைத் தொழில்களை முன்னிலைப்படுத்தும் விதமாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள உதவும், சூழலுக்கு உகந்த பொருட்களின் உற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டம் ஸ்டார்ட் அப் தமிழ்நாடு இயக்கத்தோடு ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்திற்கு 2024-2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22.35 கோடி நிதியிலிருந்து ரூ.3 கோடி பயன்படுத்தப்படும்.

4) பசுமைப் பள்ளிக்கூடத் திட்டம்

காலநிலை மாற்றம் என்பது தற்போது ஒரு தவிர்க்க இயலாத பிரச்சினை என்பதால் இளைய தலைமுறையினர் இதுகுறித்து அறிந்துகொள்வதும், அதன் விளைவுகளை ஏற்பதற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கும் தயாராவது அவசியமான ஒன்றாகும். இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமைத் தமிழ்நாடு திட்டத்தின் குறிக்கோளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சூழல் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் 25 பள்ளிகள் மற்றும் 2023-2024 ஆம் ஆண்டில் 46 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு அப்பள்ளிகளில் இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, 2024-2025 ஆம் ஆண்டில் மேலும் 100 பள்ளிகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5) தமிழ்நாட்டில் உள்ள திடக்கழிவு குப்பைக் கிடங்குகளில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு

சமீப காலங்களில், வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், தமிழகத்தில் உள்ள திடக்கழிவு குப்பைகிடங்குகளில் மீத்தேன் அளவு அதிகரித்து, தீ விபத்து ஏற்பட்டு பல நாட்களுக்கு நீடிப்பதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. ஆகையால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, குப்பைகொட்டும் இடங்களை திறம்பட கண்காணிப்பது தற்போதைய தேவையாகும். எனவே, வெப்ப புகைப்பட கருவி (Camera), வாயு கண்டறியும் ஸென்ஸார்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கட்டுப்பாட்டு மென்பொருள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நிகழ்நேர தரவுகள் அடிப்படையில் எச்சரிக்கைகளை வழங்குவதன்மூலம், அபாயங்களை குறைக்கவும் மற்றும் நிர்வகிக்கவும் முடியும்.

இதன் அடிப்படையில், ஆரம்ப கட்டமாக சென்னை மாநகராட்சியில் உள்ள பெருங்குடி மற்றும் புதுக்கோட்டை மாநகராட்சியில் உள்ள திருக்கட்டளை ஆகிய இடங்களில் உள்ள திடக்கழிவு குப்பை கிடங்குகளில் ரூபாய் 4 கோடி செலவில் வெப்ப புகைப்பட கருவி (Camera) மற்றும் விஷவாயு கண்டறியும் ஸென்ஸார்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவப்படும்.

6) தமிழ்நாட்டில் மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ஒலி வரைபட ஆய்வு மேற்கொள்ளுதல் (சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை)

வாகன பயன்பாடு, தொழிற்சாலை செயல்பாடுகள், கட்டுமான தொழில்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றால் தமிழ்நாட்டின் பெருநகரங்களில் ஒலி மாசு அதிகரித்துள்ளது. ஒலி மாசினால் மக்களின் உடல்நலம் மற்றும் மனநலம் பாதிப்படைகிறது.

சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளின் எல்லைக் குட்பட்ட குடியிருப்பு, போக்குவரத்து சந்திப்புகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், வணிக பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஒலிமாசினை ஸென்ஸார்மூலம் அளவிடும் ஒலி மாசு வரைபட ஆய்வு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் ரூபாய் 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

7) வாரிய ஆய்வகங்களை காற்று மற்றும் நீர் பகுப்பாய்வுக்கான அதிநவீன கையடக்க கருவிகளைக் கொண்டு மேம்படுத்துதல்

புயல் மற்றும் பெருவெள்ளம், எதிர்பாராத வாயு கசிவுகள், எண்ணெய் கசிவுகள், தீ மற்றும் வேதியியல் விபத்துக் களின்போது வெளியேறும் நச்சு வாயுக்கள் / வேதிப்பொருட்களை உடனடியாக கண்டறிந்து பொதுமக்க ளின் புகார்களை விரைவில் நிவர்த்தி செய்யும்பொருட்டு காற்று மற்றும் நீர் தர ஆய்வுகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட உபகரணங்கள் வாரியத்தின் ஆய்வகங்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களுக்கு வாரிய நிதியிலிருந்து ரூபாய் 6 கோடி செலவில் வாங்கப்படும்.

1. கார அமில தன்மை (pH), கடத்துத்திறன் (Conductivity) மற்றும் கலங்கல் தன்மை (Turbidity) கண்டறிவதற்கான கையடக்க கருவிகள்

2. எளிதில் ஆவியாகும் கரிம கார்பன் (VOC analyser) பகுப்பாய்வு கருவி

3. நைட்ரிக் ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு மற்றும் நுண் துகள்கள் கலந்து வெளியேறும் வாயுக்களை கண்டறிவதற்கான ஃப்ளூ கேஸ் அனலைசர் (Flue gas analyser)

4. அம்மோனியா, கார்பன் மோனாக்சைடு (CO), கார்பன் டை ஆக்சைடு (CO2), மற்றும் ஓசோன் (O3) போன்ற வாயுக்களின் அளவினை கண்டறியும் கையடக்க சென்சார் கருவிகள்

5. காற்றில் மிதக்கும் 2.5 மைக்ரான் மற்றும் 10 மைக்ரான் நுண் துகள்களின் அளவினை கண்டறியும் கையடக்க கருவி

6. அல்ட்ரா வயலட் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டர் (Ultraviolet Spectrophotometer).

7. பென்சின், டொலுவின், எத்தில்பென்சீன் (BTEX) கண்டறியும் கையடக்க கருவி

8) தமிழ்நாடு ஏரிகளின் நிகழ்நேர தர கண்காணிப்பு திட்டம் (TNLMP) (பூண்டி, செம்பரம்பாக்கம், உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல்)

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தேசிய நீர் தரக் கண்காணிப்பு திட்டத்தின் (NWMP) கீழ், ஆறுகள், ஏரிகள் மற்றும் நிலத்தடிநீர் ஆகியவற்றின் நீரின் தரத்தை மாதம் ஒருமுறை மாதிரிகள் சேகரித்து கண்காணித்து வருகிறது.

நீரின் தரத்தினை நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தரவு பகுப்பாய்வுமூலம் தொடர் கண்காணிப்பு செய்வதற்கான "தமிழ்நாடு ஏரி தர கண்காணிப்பு திட்டம்" (TNLMP) முக்கியத்துவம் வாய்ந்த நீர் ஆதாரங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் முதல் கட்டமாக பூண்டி, செம்பரம்பாக்கம், உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் செயல் படுத்தப்படும்.

இந்த திட்டம்மூலம் பெறப்படும் தரவுகள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு, நீர் நிலைகளின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

இத்திட்டமானது சென்னை தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் ரூபாய் 5 கோடி செலவில் செயல்படுத்தப்